**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 03ம் நாள் திங்கட்கிழமை**

**Crl.M.P.No.1758/2025**
**in**
**Cr.No.25/2024 of Sikkal PS**

உம்முல் பரிதா, (50/2024)
க/பெ.சேக் மீரான்,
வல்லக்குளம்,
கடலாடி தாலுகா,
இராமநாதபுரம் மாவட்டம். ...மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

அரசுக்காக சார்பு ஆய்வாளர்
சிக்கல் காவல் நிலையம். ...எதிர்மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்.

/எதிர்/

இம்மனு என் முன்பாக 22.10.2025ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது ஆட்சேபனை மனுதாரர் தரப்பில் மனுதாரர் ஆஜராகியும், குற்ற முறையீட்டாளர் மற்றும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

சிக்கல் காவல் நிலைய குற்ற எண்.25/2024 வழக்கில் குற்ற இறுதியறிக்கையில் நீக்கம் செய்யப்பட்ட எதிரியையும் சேர்த்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனை மனுவின் சுருக்கம்.</u>**

வழக்கின் புகார் மனுவில் எதிரிகள் இருவர் சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், 2 வது எதிரி வழக்கிலிருந்து நீக்கம் செய்யப்பட்டும் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 2 வது எதிரிதான் இவ்வழக்கின் பிரச்சனைக்கு முழு காரணம் என்பதால் குற்ற இறுதியறிக்கையில் நீக்கப்பட்ட 2 வது எதிரியையும் சேர்த்து வழக்கு நடத்தக்கோரி ஆட்சேபனை மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>தீர்வு</u>**

3) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் கடந்த 25.02.2024 ம் தேதியன்று புகார்தாரர் அளித்த புகார் மனுவின் அடிப்படையில் சிக்கல் காவல் நிலைய குற்ற எண்.25/2024 பிரிவுகள் 294(b), 323, 506(1) இ.த.ச.–ன் கீழ் 2 எதிரிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, வழக்கின் 2 வது எதிரி நீக்கம் செய்யப்பட்டும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்ற இறுதியறிக்கையில் நீக்கம் செய்யப்பட்ட எதிரி குறித்து மனுதாரரின் ஆட்சேபனைக்காக அறிவிப்பு அனுப்பப்பட்டதில் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை மனுதாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட பட்டியல் சாட்சிகள் மில்லத் சோபியாபானு, சப்ரியத் பீவி ஆகியோர் அளித்த 161(3) கு.வி.மு.ச. வாக்குமூலத்தில் 2 வது எதிரியான உம்முனினா என்பவர் அங்கு இருந்ததாகவும், புகார்தாரரை முள்கம்பியால் அடிக்கவில்லை என்றும், இடப்பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு அடித்ததாக மிகைப்படுத்தி பொய்யாக புகார் அளித்துள்ளதாக போலீசாரிடம் அளித்த விசாரணை வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில்தான் வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எதிரி நீக்கல் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. எனவே புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனை மனுவில் எந்தவொரு முகாந்திரமும் இல்லை என்பதால்

ஆட்சேபனை மனுவை தள்ளுபடி செய்தும், புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்த குற்ற இறுதியறிக்கையை கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்யவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 03.11.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.11.03 17:33:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.